# ஆரச்சிகட்டுவ பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ஆரச்சிகட்டுவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆண்டின் போது ரூபா 81,339 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட 02 அலகுச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானம் மற்றும் செலவினம் திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்வரும் ஆண்டுகளுக்காக பெறப்பட்ட வீதவரி ரூபா 68,759 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது டபிள் கப் வண்டி மற்றும் போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படுகையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 857,169 தொகையான பெறுமதி சேர் வரிப் பெறுமதியும் உள்ளடங்கலாக அச் சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதற்காக அப் பெறுமதியால் நிலையான சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தால் பங்களிப்புக் கணக்கு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 3,500,000 ஆன போதிலும் மீளாய்வாண்டின் போது 2010 ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,777,078 ஆனமையால் குறை ஏற்பாடான ரூபா 1,277,078 தொகையான கடன்பட்டோர் மற்றும் ஒன்றுதிரண்ட நிதியம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஆண்டின் போது பெறப்பட்ட மூலதன மானியப் பெறுமதி ரூபா 1,844,896 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிராததுடன் மூலதன மானியக் கணக்கில் செலவு மீதி நிலுவையாகக் காணப்பட்ட ஏனைய வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மூலதன மானியப் பெறுமதயும் நிலுவையான ஏனைய வருமானப் பெறுமதியும் ரூபா 1,844,896 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்களுக்குரிய பெறுமதி ரூபா 16,266,139 ஆக இருந்ததுடன், உரிய பட்டோலைகளின் பிரகாரமான மீதி ரூபா 16,303,168 ஆனமையால் ரூபா 218,975 தொகையான மறை மற்றும் ரூபா 256,004 தொகையான நேர் மீதி காணப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,762,705 தொகையானதுடன் 01 வருட காலத்திற்கு மேலான காலமாகக் காணப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,469,293 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 33,162,508 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,548,161 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,087,587 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 2,932 | 2,612 | (8,542) |
| (ii) | வாடகை | 2,319 | 1,925 | 5,990 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 925 | 827 | 32 |
| (iv) | ஏனைய வருமானம் | 27,713 | 69,289 | 14,412 |

**2.2.2 வீத வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் வீத வரி 1380 அலகுகளுக்கு உரித்தான ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட நிலுவையான வீத வரி அளவு ரூபா 5,680,341 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 வாடகை**

சபைக்குரித்தான வாராந்தச் சந்தை மற்றும் ஏனைய ஆதனங்களில் நீண்ட காலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 4,145,904 தொகையான வரித் தொகை அறவிடுவது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 3,013,184 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,474,577 |

**2.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,685,570 தொகையான ஆனவிலுன்தாவ மீன் சந்தை நிர்மாணிப்பிற்காக 2005 ஆம் ஆண்டு வரை ரூபா 1,618,954 தொகையான செலவினத்தை ஏற்றிருந்த போதிலும் ஏற்பாடில்லாத காரணத்தால் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்படாதிருந்தமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றிருந்தமை 2013 யூலை 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**(அ) டபிள் கப் வண்டிக் கொள்வனவு**

மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் ரூபா 7,900,000 தொகையான செலவில் தனியார் கம்பனியின் டபிள் கப் வண்டி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வருடாந்தப் பாதீட்டில் போதுமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) மொத்தச் செலவினமான ரூபா 7,900,000 தொகையான சபை நிதியத்தால் ஏற்கப்படுவதற்காக பொதுக் கூட்ட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்கச் செலவினம் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எரிபொருள் பயன்பாடு**

தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக சபையால் மாதம் ஒன்றிற்குரிய எரிபொருள் எல்லை விதிக்கப்பட்டிராததன் காரணமாக 2012 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையான 04 மாதங்களுக்காக 3259 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 401,144 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத்துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்